**தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், சிவகங்கை.**

**MCOP.No. 154/2024**

**PW.1.**

*****

2025 ஆண்டு நவம்பர் திங்கள் 19 ம் நாள் மனுதாரர்/எதிர்மனுதாரர் என்பவரின் சாட்சியான வாக்குமூலம் 1956 ஆண்டு 10 வது விதியின்படி திரு.செல்லப்பாண்டி Grade II Bench Clerk என்பவரால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | : **முரளி** | **தந்தை/கணவர் பெயர்** | : |
| **கிராமம்** | : | **தாலுகா** | : |
| **தொழில்** | : | **வயது** | : |

---

**முதல் விசாரணை**

**19.11.2025**

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். எனது சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். விபத்து சம்மந்தமாக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை இணையதள நகல் **ம.சா.ஆ.1** ஆகும். சிவகங்கை அரசுமருத்துகல்லூரி மருத்துவமனையில் இருந்து வழங்கப்பட்ட விடுவிப்பு சான்றிதழ் அசல் **ம.சா-ஆ.2** ஆகும். சிவகங்கை அரசுமருத்துகல்லூரி மருத்துவமனையில் இருந்து வழங்கப்பட்ட விபத்து பதிவேட்டு நகல் **ம.சா.ஆ.3** ஆகும். சிவகங்கை அரசுமருத்துகல்லூரி மருத்துவமனையில் இருந்து வழங்கப்பட்ட காயச்சான்றிதழ் இணையதள நகல் **ம.சா-ஆ.4** ஆகும். மதுரை SRK மருத்துவமனையில் இருந்து வழங்கப்பட்ட விடுவிப்பு சான்றிதழ் அசல் **ம.சா-ஆ.5** ஆகும். ரூ.1,63, 168.31/-க்கான மருத்துவர் ஊதியம் மற்றும் மருத்துவமனை பில்கள் **ம.சா.ஆ- 6** ஆகும்.

மனுதாரருக்கு காலில் பொருத்தப்பட்டுள்ள பிளேட்டை நீக்குவதற்கு ரூ.1, 50, 000/- செலவாகும் என்பதற்கான மருத்துவரால் வழங்கப்பட்ட சான்றிதழ் **ம.சா- ஆ 7** ஆகும். ரூ. 11, 988.84 க்கு வெளிநோயாளியாக சிகிச்சை பெற்றதற்கான மருந்து பில்கள் **ம.சா.ஆ- 8 (17 எண்ணம் ) வரிசை** ஆகும். சிவகங்கை அரசுமருத்துகல்லூரி மருத்துவமனையில் இருந்து வழங்கப்பட்ட CD scan report அசல் **ம.சா.ஆ- 9** ஆகும். 1ம் எதிர் மனுதாரரின் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை இணையதள நகல் **ம.சா.ஆ. 10** ஆகும். எனது இருசக்கர வாகனத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை இணையதள நகல் **ம.சா.ஆ. 11** ஆகும். மாதிரி வரைபடம் நகல் **ம.சா.ஆ. 12** ஆகும். குற்ற இறுதி அறிக்கை நகல் **ம.சா.ஆ. 13** ஆகும்.அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட எனது வங்கி கணக்கு புத்தக நகல் **ம.சா.ஆ.14** ஆகும். அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட எனது ஆதார் அட்டை நகல் **ம.சா.ஆ.15** ஆகும் பாரதிய சாட்சிய அதிநியம் (BSA) பிரிவு 63 சான்றிதழ் அசல் **ம.சா.ஆ.16** ஆகும். மனுப்படி உத்தரவாக வேண்டும்.

**1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை :**

1ம்எதிர் மனுதாரர் வாகனத்தை 2ம் எதிர் மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு மேற்படி காப்பீடும் விபத்து சமயத்தில் அமலில் உள்ளதால் எனக்கு ஏதவாது இழப்பீடு வழங்கவேண்டும் என்றால் 2ம் எதிர் மனுதாரர் தான் வழங்கவேண்டும் என்றால் சரிதான்.

**(2ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர்வேண்டுகோளுக்குஇணங்க குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2025.11.19 13:02:04 +0530

தலைமைக் குற்றவியல் நடுவர்,

சிவகங்கை.